# சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் - கனடா

# போட்டி விபரங்களும் விதிமுறைகளும் - 2019

## பேச்சுப் போட்டி : பிரிவு 1-7

போட்டிக்கான கீழ்வரும் தலைப்புகளுக்குரிய ஆக்கங்கள் எமது இணையத்தளத்தில் (www.vipulam.org ) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

| பிரிவுகள் | | தலைப்பு |
|---|---|---|
| பிரிவு 1 | : | சுவாமி விபுலாநந்தர் |
| பிரிவு 2 | : | முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் |
| பிரிவு 3 | : | சுவாமி விபுலாநந்தரின் சமூகப்பணிகள் |
| பிரிவு 4 | : | சுவாமி விபுலாநந்தரின் கல்விப்பணிகள் |
| பிரிவு 5 | : | பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் |
| பிரிவு 6 | : | சுவாமி விபுலாநந்தரின் பன்முக ஆளுமைகள் |
| பிரிவு 7 | : | சுவாமி விபுலாநந்தரின் யாழ்நூல் |

## சொல்வதெழுதுதல் போட்டி : பிரிவு 3,4,5

பிரிவு 3 **-** தரப்பட்ட சொற்களில் இருந்து 10 சொற்களும் மேலதிகமாக இவை போன்ற 4 புதிய சொற்களும் கேட்கப்படும்.
பிரிவு 4 **-** தரப்பட்ட சொற்களில் இருந்து 15 சொற்களும் மேலதிகமாக இவை போன்ற 6 புதிய சொற்களும் கேட்கப்படும்.
பிரிவு 5 **-** தரப்பட்ட சொற்களில் இருந்து 20 சொற்களும் மேலதிகமாக இவை போன்ற 8 புதிய சொற்களும் கேட்கப்படும்.
**குறிப்பு -** போட்டியாளர்கள் பெறும் புள்ளிகளில் சமநிலை காணப்படும் பட்சத்தில், புதிய சொற்கள் வழங்கப்பட்டு, அதன் பெறுபேறுகளைக் கொண்டு இறுதி முடிவெடுக்கப்படும். (Tie break)
சொல்வதெழுதுதல் போட்டிக்குரிய சொற்கள் எமது இணையத்தளத்தில் (www.vipulam.org) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## சுய ஆக்கம் : பிரிவு 7 காட்சிப்படுத்தி முன்வைத்தல் (Presentation)

போட்டியாளர் கீழே தரப்பட்டுள்ள தலைப்பிற்கான சுய ஆக்கத்தினை தயாரித்து (5 - 7 நிமிடம்) முன்வைத்தல் வேண்டும்.

1. சுவாமி விபுலாநந்தரின் கல்விப்பணிகள்.

## பாடல் போட்டி : பிரிவு 1-7 (சுருதி வாத்தியம் மட்டும் அனுமதிக்கப்படும்)

* பிரிவு 1, பிரிவு 2 - பாரதியார் பாப்பா பாடல் - ஒரு பாடல் பாட வேண்டும் (2 நிமிடங்கள்)
* பிரிவு 3, பிரிவு 4, பிரிவு 5 - பாரதியார் பாடல், தமிழிசைப் பாடல் - தலா ஒவ்வொரு பாடல் வீதம் இரண்டு பாடல்கள் பாட வேண்டும். (5 நிமிடங்கள்)
* பிரிவு 6, பிரிவு 7 : விபுலாநந்தர் பாடல், பாபநாசம் சிவனின் கிருதி அல்லது கீர்த்தனம் - தலா ஒவ்வொரு பாடல் வீதம் இரண்டு பாடல்கள் பாட வேண்டும். (5 நிமிடங்கள்)

* பாபநாசம் சிவனின் கிருதி அல்லது கீர்த்தனம் - பல்லவி 3 சங்கதிகளுக்கு குறைவில்லாமல் இருக்க வேண்டும்.

* விபுலாநந்தர் பாடல் (வெள்ளை நிற மல்லிகையோ) - எமது இணையத்தளத்தில் (www.vipulam.org) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## நீதிநூல் போட்டி : ஆத்திசூடி பிரிவு-1 / கொன்றைவேந்தன் பிரிவு-2

* முதல் 13 ஒற்றைவரி பாக்களையும் முழுமையாக மனனம் செய்து உச்சரிப்பு பிழையின்றி கூறவேண்டும். ஆத்திசூடி / கொன்றைவேந்தன் ஆகிய இரண்டிற்குமான பாக்கள் எமது இணையத்தளத்தில் (www.vipulam.org) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## திருக்குறள் : பிரிவு 3-7

பிரிவு 3. அதிகாரம் - அன்புடைமை
பிரிவு 4. அதிகாரம் - விருந்தோம்பல்
பிரிவு 5. அதிகாரம் - கல்வி
பிரிவு 6. அதிகாரம் - பண்புடைமை
பிரிவு 7. அதிகாரம் - நட்பு

* **பிரிவு 3-4** தரப்பட்டுள்ள அதிகாரத்திலுள்ள முதல் 7 குறள்களிலிருந்து 4 குறள்களும் அதற்கான விளக்கமும் (தமிழில்) நடுவர்களால் கேட்கப்படும்.
* **பிரிவு 5-7** தரப்பட்டுள்ள அதிகாரத்திலுள்ள முதல் 10 குறள்களிலிருந்து 5 குறள்களும் அதற்கான விளக்கமும் (தமிழில்) நடுவர்களால் கேட்கப்படும்.
* முழுமையாக மனனம் செய்து பொருள் விளங்க கூறவேண்டும்.
* போட்டியாளர்கள் பேழையிலுள்ள, குறள்களுக்குரிய இலக்கங்கள் எழுதப்பட்ட சீட்டிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து தங்கள் குறள்களையும் விளக்கத்தினையும் உச்சரிப்புப் பிழையின்றி கூறவேண்டும்.
* போட்டிக்குரிய குறள்களும், விளக்கமும் (தமிழ், ஆங்கிலம்) எமது இணையத்தளத்தில் (www.vipulam.org) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## சிறுகுறிப்பு எழுதுதல் : பிரிவு 6

*கீழே தரப்பட்டுள்ள மூன்று தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவுசெய்து அதுபற்றி சுயமாக 7 வசனம் எழுதுதல் வேண்டும்.
* தலைப்பிற்கேற்ப பொருள் விளங்க, கருத்து ஒழுங்குக்கு அமைய எழுதுதல் வேண்டும்.
* எழுத்துப் பிழையின்றி, உறுப்பமையவும் நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
* நிறுத்தக் குறிகள் பொருத்தமான இடத்தில் பயன்படுத்தப்பட வேண்டும்.

### தலைப்புகள் :

1. ஆறுமுகநாவலர்
2. சி.வை.தாமோதரம்பிள்ளை
3. தனிநாயகம் அடிகளார்

### பொது விதிமுறைகள்:

- வினாத்தாள்கள் யாவும் போட்டி நடைபெறும் மண்டபத்தில் வைத்தே வழங்கப்படும்.
- பிறந்த திகதியை உறுதிப்படுத்துவதற்கு போட்டியாளர் தமது மருத்துவ அட்டை (Health Card) அல்லது பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றில் ஒன்றை தம்முடன் எடுத்துவரல் வேண்டும்.
- சகல போட்டிகளும் **July 14, 2019** காலை **9:00** மணிக்கு ஆரம்பிக்கப்படும். **8:30** மணிக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.
- விண்ணப்பப்படிவங்களை இறுதித் திகதிக்குப் முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.
- போட்டியில் பங்குபற்றுவோர், பதிவுக்கட்டணமாக **ஒரு போட்டிக்கு** 10 **டொலர்களும் ($10.00), மேலதிகமான ஒவ்வொரு போட்டிக்கும் ஐந்து டொலர்கள் ($5.00)** வீதம் போட்டி நடைபெறும் தினத்தன்று செலுத்த வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி July 7, 2019 ஆகும்.**

**போட்டிகளுக்கான சொற்கள், கட்டுரைகள், மற்றும் மேலதிக விபரங்களை எமது இணையத்தில் (www.vipulam.org) பெற்றுக்கொள்ளலாம்.**

**விண்ணப்ப்பபடிவங்களை ONLINE இல் தயாரித்து அனுப்பும் வசதி செய்யப்பட்டுள்ளது.**
**Application forms can now be filled out Online.**

**Online** : www.vipulam.org

**Email** : vipulamcanada@gmail.com

**Post** : **Nithi Sivanandarajah**
**605 – 45 Huntingdale Blvd**
**Scarborough, On**
**M1W 2N8**

**Info** : **416 844 3304 / 647 629 9395 / 647 861 8240**